www.Padasalai.Net

12302

# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – 2022

வகுப்பு – 12 வரலாறு மதிப்பெண் : 50

காலம் : 1.30 மணி

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 10 x 1 = 10**

1. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
   அ) அரிஸ்டாட்டிஸ் ஆ) பிளாட்டோ இ) ரோஜர் பேக்கன் ஈ) லாண்ட்ஸ்டெய்னர்
2. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை
   அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்
3. வட அமெரிக்காவில் முதன்முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் .............
   அ) போர்த்துகீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்
4. பாஸ்டில் சிறை தகர்ப்பு .........இல் நடந்தது.
   அ) 1789, ஜுன் 5 ஆ) 1789, ஜுலை 14 இ) 1789, நவம்பர் 11 ஈ) 1789 மே 1
5. .............. நகரம் "காட்டன்பொலிஸ் எனம் புனைப்பெயரைப் பெற்றது.
   அ) மான்செஸ்டர் ஆ) லங்காசயர் இ) லிவர்பூல் ஈ) கிளாஸ்கோ
6. கோட் டெ லா நேச்சர் என்ற நூலின் ஆசிரியர் ........... ஆவார்.
   அ) சார்லஸ் ஃபூரியர் ஆ) எட்டியன் – கேப்ரியல் மோரால்லி
   இ) செயின்ட் சீமோன் ஈ) பகுனின்
7. இரு உலகங்களின் நாயகன் என கொண்டாடப்பட்டவர் ........... ஆவார்.
   அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி
8. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு ........... ஆகும்.
   அ) ஸ்பெயின் ஆ) பிரிட்டன் இ) அமெரிக்க ஐக்கிய நாடு ஈ) பிரான்ஸ்
9. பன்னாட்டு சங்கம் ......... ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.
   அ) 1939 ஆ) 1941 இ) 1945 ஈ) 1946
10. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது?
    அ) அவந்தி ஆ) ப்ராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி 5 x 2 = 10**

11. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
12. சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
13. தொழிற்புரட்சியின் சிறப்புக்கூறுகளை முன்னிலைப் படுத்திக் காட்டவும்.
14. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன்?
15. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
16. பால்கன் சிக்கலின் விளைவுகள் உள்ளடக்கிய சிறப்புக் கூறுகளை எழுதுக.
17. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி 5 x 2 = 10**

18. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

19. 1492இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
20. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
21. தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தது என்ன?
22. பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோசம் - தெளிவுபடுத்துக.
23. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
24. பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாக முடித்து வைத்த சிக்கல்கள் பற்றி குறிப்பு வரைக.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **3 x 5 = 15**

25. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.
(அல்லது)
தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?
26. இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது? (அல்லது)
அமெரிக்க விடுதலைப் போரில் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடிட்டு காட்டவும். 1776 -
27. முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக. (அல்லது)
முசோலினியும், ஹிட்லரும் பாசிச அரசுகளை முறையே இத்தாலியிலும் ஜெர்மனியிலும் நிறுவ சாதகமாக சூழல் எழுந்தமையை விளக்குக.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner